DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure Judicial Form No.53)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, SIVAGANGAI.

| | | | |
|---|---|---|---|
| Case No. | : CC. 263/2022 | Taluk | : சிவகங்கை |
| Deposition of Witness for | : PW 4 | Caste | : |
| Name | : மஞ்சுளா | Calling | : |
| Father / Husband Name | : முத்து | Religion | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873 of the date of 15th September 2025.

---------------------------------------------------------------------------------------------------

(எதிரி ஆஜரில்லை.).

முதல் விசாரணை:-

நான் திருப்பத்தூரில் குடியிருந்து வீட்டுக்குடித்தனம் நடத்தி வருகிறேன். கடந்த 29.08.2021 ம் தேதி எனது உறவினரான அத்தை கலையரசி என்பவருக்கும் அவரது மகன் விஜயகுமார் என்பவருக்கும் சொத்து பிரிப்பது சம்பந்தமாக பிரச்சனை நடந்தது. விஜயக்குமார் என்னையும், எனது அத்தை கலையரசி, எனது அம்மா ராணி, எனது அத்தை மகள் கிருஷ்ணவேனி மற்றும் அவரது கணவர் விஜயக்குமார் ஆகியோரையும் விஜயக்குமார் தாக்கினார். மேலும் வீட்டு ஜன்னல் மற்றும் தண்ணீர் குழாய் இணைப்புகளையும் சேதாரம் செய்தார். சம்பவத்தில் எனக்கு இடது கையில் கம்பை வைத்து அடித்ததில் வீக்க காயம் ஏற்பட்டது. எனது அம்மாவுக்கு இடது நெற்றியில் கம்பை வைத்து அடித்ததில் வீக்க காயம் ஏற்பட்டது. மற்ற நபர்களுக்கு சண்டையில் லேசான காயம் ஏற்பட்டது. பின்னர் எனது அத்தை கலையரசியை நாங்கள் எங்களது வீட்டிற்கு அழைத்துச் சென்றுவிட்டோம். பின்னர் சம்பவம் தொடர்பாக சிவகங்கை நகர் காவல் நிலையத்தில் எனது அத்தை கலையரசி புகார் மனு கொடுத்தார். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தனர்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை வாய்ப்பளித்தும் இல்லை.

சாட்சி அரசு எதிரிதரப்பு வழக்கறிஞர்கள் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சொல்லச்சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.1,
சிவகங்கை.

SELVAM P

Digitally signed by SELVAM P
Date: 2025.09.15 15:47:08 +0530

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure Judicial Form No.53)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, SIVAGANGAI.

| | | | |
|---|---|---|---|
| Case No. | : CC. 263/2022 | Taluk | : சிவகங்கை |
| Deposition of Witness for | : PW 5 | Caste | : |
| Name | : முத்து | Calling | : |
| Father / Husband Name | : மெய்யனன் @ மெய்யநாதன் | Religion | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873 of the date of 15th September 2025.

-----------------------------------------------------------------------------------------------------

**(எதிரி ஆஜரில்லை.).**

**முதல் விசாரணை:-**

நான் திருப்பத்தூரில் குடியிருந்து ஓட்டுநராக வேலைப் பார்த்து வருகிறேன். கடந்த 30.08.2021 ம் தேதி இரவு 07.30 மணியளவில் சிவகங்கை நகர் காவல் நிலையப் போலீசார் என் முன்னிலையிலும் பாண்டி என்பவர் முன்னிலையிலும் விஜயக்குமார் வீட்டை சேதப்படுத்தியதைப் பார்வையிட்டு பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்தனர். பார்வை மகஜருக்கு சாட்சியாக இருப்பதற்கு கேட்டுக்கொண்டதற்காக நானும் பாண்டி என்பவரும் பார்வை மகஜரில் கையொப்பம் செய்தோம். பார்வை மகஜரில் உள்ள விவரங்களை நான் படித்துப் பார்த்து கையொப்பம் செய்தேன். பார்வை மகஜரில் உள்ள 2 வது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். **பார்வை மகஜர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தனர்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை** வாய்ப்பளித்தும் இல்லை.

சாட்சி அரசு எதிரிதரப்பு வழக்கறிஞர்கள் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சொல்லச்சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.1,
சிவகங்கை.

SELVAM P

Digitally signed by SELVAM P
Date: 2025.09.15 15:47:18 +0530